ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2407/04 - 2024 ඔක්තෝබර් මස 22 වැනි අඟහරුවාදා - 2024.10.22
*2407/04 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2005 (11)*

**2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டம்**

*2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 160அ, 161ஆ, 161இ, 161ஈ, 161உ, 161ஊ 161எ, 161ஐ, 161ஒ மற்றும் 161 ஔ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின்204 ஆம் பிரிவின் கீழ் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஹரினி அமரசூரிய,
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு,
கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும்
தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்.

1. இவ்வொழுங்குவிதிகள், 2024 ஆம் ஆண்டின் புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளைப் பதிவுசெய்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*பாகம்1*

**புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்**

2. இச்சட்டத்தின் கீழ் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றைப் பதிவு செய்வதற்கு உட்கருதுகின்ற விண்ணப்பகாரரொருவர், விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவையான ஆவணங்களுடனும் மற்றும் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பச் செயன்முறைப்படுத்தற் கட்டணத்துடனும் சேர்த்து, அத்தகைய நோக்கத்துக்காக முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆயின் எவ்வாறாயினும், ஏலவே பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றுக்கு இணையொப்பான சுட்டிக்காட்டுகையொன்றாகவுள்ள புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றைப் பதிவுசெய்வதற்கு உட்கருதுகின்ற விண்ணப்பகாரரொருவர், அவரது விண்ணப்பத்துடன் சேர்த்து, பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளிலிருந்து அவரது விண்ணப்பத்தை வேறுபடுத்துகின்ற முக்கிய காரணிகளையும் அத்துடன் அத்தகைய பதிவுசெய்தலின் விளைவாக ஏலவே பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையானது குழப்பநிலைக்கு உள்ளாகவில்லையென்று அத்தகைய பண்டங்களின் நுகர்வோருக்கு உறுதிப்படுத்துவதற்கென விண்ணப்பகாரரினால் ஏற்புச்செய்யப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய விபரங்களையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், விண்ணப்பதாரர் இதற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்ட விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லாத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளாரா என்பதை நிச்சயப்படுத்துவதற்கென விண்ணப்பத்தைப் பரீட்சித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இன் நோக்கங்களுக்காக பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றைச் செய்யலாம்–

(i) அவர் அவசியமெனக் கருதினால், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் எனும் துறையிலுள்ள எவரேனும் நிபுணரிடமிருந்தான அறிவுரையை நாடலாம் ;

(ii) பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்படும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகை தொடர்பான புவியியல் பிரதேசத்திலுள்ள தளத்துக்கு அவதானிப்பு விஜயமொன்றைச் செய்யலாம் ; அல்லது

(iii) விண்ணப்பத்தை ஆதரிக்கும் வகையில் பிரதேசத்திலுள்ள நிபுணர்களிடமிருந்து எவையேனும் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி விண்ணப்பகாரரைப் பணிக்கலாம்.

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் விண்ணப்பம் பரீட்சிக்கப்பட முன்னர் விண்ணப்பகாரர், அவ்விண்ணப்பத்தில் அல்லது அவ்விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பப்பட்ட ஆதரிக்கும் ஆவணங்களில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் விபரங்களைத் திருத்துவதற்கான கோரிக்கையொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாம்.

4. பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்படும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்று பொதுப்படையானதாக ஆகியுள்ளதா என்பதைக் கருத்திற்கொள்வதில், எந்த பிராந்தியத்தில், இடத்தில் அல்லது வட்டாரத்திலிருந்து அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகை தோற்றம் பெறுகின்றதோ அந்தப் பிராந்தியத்தில், இடத்தில் அல்லது வட்டாரத்திலுள்ள புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் தற்போதுள்ள நிலைமை மற்றும் அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகை பற்றிய அத்தகைய பண்டங்களின் நுகர்வுப்பகுதி என்பனவுட்பட, அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையுடன் தொடர்புடைய எல்லாக் காரணிகளையும் கவனத்திற்கு எடுக்கலாம்.

## பாகம் II

### விண்ணப்பத்தை வெளியிடுதல் மற்றும் பதிவுசெய்வதனை எதிர்த்தல்

5. பணிப்பாளர் தலைமையதிபதி, பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்படும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையானது சட்டத்தின் 161அ என்னும் பிரிவின் நியதிகளின்படி ஏற்கத்தக்கதென அபிப்பிராயப்படுமிடத்து, அவர் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், அவரினால் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலப்பகுதியொன்றினுள் அத்தகைய விண்ணப்பத்தை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

6. (அ) ஐந்தாம் ஒழுங்குவிதியின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையானது சட்டத்தின் 161அ என்னும் பிரிவின் நியதிகளின்படி ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கின்றதெனக் கருதுகின்ற எவரேனுமாள், அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பதிவுசெய்வதற்கான எதிர்ப்புப் பற்றிய அறிவித்தலொன்றை இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து இதற்கான மூன்றாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி வேறு வகையில் பணித்தாலொழிய, ஏதேனும் கேட்பில் சட்டத்தின் 161ஈ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் சாட்சியமளிக்கின்ற எவரேனுமாள் அத்தகைய சான்றை சத்தியக்கடதாசியொன்றின் வடிவத்தில் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர், திறத்தவர்கள் எழுத்திலான சமர்ப்பணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றை பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தேதியில் கோப்பிடுதலும் வேண்டும்.

பாகம் III

**புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளைப் பதிவுசெய்தல்**

7. (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, சட்டத்தினதும் இவ்வொழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய திருத்தங்கள், நிபந்தனைகள் அல்லது மட்டுப்பாடுகளுக்கு உட்படும் வகையில், அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை ஒன்றில் பதிவுசெய்யலாம் அல்லது விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்பட வேண்டிய காரணங்களைக் கூறி அதனைப் பதிவுசெய்ய மறுக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான புவியியற்சார் சுட்டிக்காட்டுகைப் பதிவுச்சான்றிதழுக்கான கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன் மேல், புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒவ்வொருவருக்கும் நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்தில் அத்தோடு அத்தகைய சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

8. (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் பற்றிய இடாப்பொன்றை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும் ; அத்தகைய இடாப்பில் தோன்றுகின்ற ஏதேனும் அச்செழுத்துச் சார்ந்த பிழையை மாற்றியமைக்கும் நோக்கத்துக்காக அது காலத்துக்குக் காலம் திருத்தப்படலாம்.

(ஆ) எவரேனுமாள், இதற்கான இரண்டாம் அட்டவணையில் (குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம், புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் பற்றிய இடாப்பைப் பரீட்சித்து அதன் சான்றுப்படுத்தப்பட்ட பொழிப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

9. பணிப்பாளர் தலைமையதிபதி, இயைபான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதற்கமைய தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளின் பதிவுக்கான விண்ணப்பங்கள் பெறப்படும் ஒழுங்கு வரிசையில் அவ்விண்ணப்பங்களை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

பாகம் IV

**பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளுக்கான மாற்றங்கள்**

10. புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் 161ஔ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காரணத்துக்காக விவரக் குறிப்புக்களையும் அவற்றோடிணைந்த கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் திருத்துவதற்கு உட்கருதினால், அவர் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து இதற்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

பாகம் V

**பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகளைப் புதுப்பித்தல்**

11. புவியியற்சார் சுட்டிக்காட்டுகை ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரொருவர், அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவு முடிவுறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் அத்தகைய புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவைப் புதுப்பிப்பதற்காக, இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து இதற்கான ஆறாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான விண்ணப்பமொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாம்.

ஆயின், எவ்வாறாயினும், விண்ணப்பதாரர் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மிகைக் கட்டணமொன்றைச் செலுத்துவதன்மேல் பதிவு முடிவுறும் தேதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் பதிவைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்கலாம்.

பொருள்கோடல்

இவ்வொழுங்குவிதிகளின்நோக்கங்களுக்காக–

“சட்டம்” என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டம் எனப் பொருள்படும் ;

“முகவர்” என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டத்தின் 175 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட முகவரொருவர் எனப் பொருள்படும் ;

"விண்ணப்பகாரர்" என்பது, சட்டத்தின்161ஆ என்னும் பிரிவினால் அத்தகைய பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"புவியியற்சார் சுட்டிக்காட்டுகை" என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தில் அப்பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"கட்டுப்பாட்டுத் திட்டம்" என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தில் அப்பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பண்டங்கள்" என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச்சொத்துச் சட்டத்தில் அப்பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"இணையொப்பான புவியியற்சார் சுட்டிக்காட்டுகை" என்பது, ஒரே விதமான எழுத்துக்களை அல்லது உச்சரிப்பைக் கொண்டுள்ள, ஆனால் வெவ்வேறுபட்ட இடங்களில், பொதுவாக வெவ்வேறுபட்ட நாடுகளில் தோற்றுவிக்கப்படுகின்ற தயாரிப்புக்களை அடையாளம் காணுகின்ற ஏதேனும் புவியியற்சார் சுட்டிக்காட்டுகை எனப் பொருள்படும் ;

பண்டங்கள் தொடர்பிலான "தொழிற்படுத்துநர்" என்பது, சந்தையில் அத்தகைய பண்டங்களை இடுகின்ற செயன்முறையில் ஈடுபடும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ; அதாவது, பண்டங்களை வியாபாரம் செய்தல், கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல்.

**முதலாம் அட்டவணை**

[ஒழுங்குவிதி 2]

**பண்டங்களின் புவியியற்சார் சுட்டிக்காட்டுகையைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்**

| | |
|---|---|
| **அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்**<br>விண்ணப்பம் பெறப்பட்ட திகதி:<br>கட்டணங்கள் செலுத்தப்பட்ட திகதி:<br>விண்ணப்ப இல. | |
| **1. விண்ணப்பதாரரின் விபரங்கள்** | |
| 1.1 பெயர்: | |
| 1.2 அஞ்சல் முகவரி: | |
| இலங்கையில் சேவைக்கான அஞ்சல் முகவரி (விண்ணப்பகாரர் இலங்கைக்கு வெளியே வதிபவராக இருப்பின்), | |
| 1.3 தொலைபேசி இல. | 1.4 தொலைநகல் இல. |
| 1.5 மின்னஞ்சல் முகவரி: | 1.6 நாட்டினம் |
| **2. விண்ணப்பதாரரின் பிரதிநிதித்துவம்** | |
| விண்ணப்பகாரர் ஆட்களின் கழகமொன்றாக இருப்பின் தயவுசெய்து பின்வரும் ஆவணங்களை இணைக்கவும்:-<br>(அ) புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பயன்படுத்துவதற்குத் தகவுடையவராகவுள்ள எல்லாத் தயாரிப்பாளர்களுக்கும் தன்னியக்க முறையிலான உறுப்பாண்மையை வழங்க வேண்டிய கழகத்தினது யாப்பின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று ; அத்துடன்<br>(ஆ) பதிவுச்சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று. | |

| | |
|---|---|
| 3. ஏதேனும் பண்டத்தை புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றாகப் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிக்கும்போது அடையாளம் காணப்படுகின்ற தயாரிப்பாளர்கள் பற்றிய பட்டியல் : | |
| **4. புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் விவரக் குறிப்புக்கள்** | |
| 4.1 புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பெயர்: | |
| 4.2 பண்டங்களின் வகை<br>(அ) கமத்தொழில்சார் பண்டங்கள்<br>(ஆ) உணவுப் பண்டங்கள்<br>(இ) கைவினைப் பண்டங்கள்<br>(ஈ) வேறு பண்டங்கள் | |
| 4.3 பண்டம் பற்றிய விவரணம் (தோதாகவிருப்பின் மூலப்பொருட்கள் அதேபோன்று பண்டத்தின் பௌதிக, இரசாயன, நுண்ணுயிரியல் அல்லது சுவை, மணம் சார்ந்த பண்புக்கூறுகள்) | |
| 4.4 அடையாளம் காணப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகைப் பகுதியில் தயாரிப்பு மற்றும், செயன்முறைப்படுத்துகைத் தயார்ப்படுத்தல் பற்றிய குறிப்பான படிமுறைகள் குறித்த விவரணம் | |
| 4.5 புவியியற்சார் வரைபடத்துடன் புவியியற்சார் பகுதி பற்றிய விவரணம் | |
| 4.6 எந்தக் குறிப்பான தரம், நற்பெயர் அல்லது வேறு பண்புக்கூறுகள் புவியியற்சார் பகுதியின் உள்ளார்ந்த இயற்கையான அல்லது மனிதக் காரணிகளூடனான புவியியற்சார் சூழலுக்கு பிரத்தியேகமானவையாக அல்லது அத்தியாவசியமானவையாக உள்ளனவோ, அந்தக் குறிப்பான தரம், நற்பெயர் அல்லது வேறு பண்புக்கூறுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட புவியியற்சார் பகுதியிலிருந்து தோற்றம் பெறுகின்றவாறான பண்டங்களைக் குறித்தளிப்பதற்கு புவியியற்சார் சுட்டிக்காட்டுகையானது எவ்வாறு உதவுகின்றது என்பது பற்றிய ஒரு கூற்று. (அத்தகைய விபரங்கள் புவியியற்சார் பகுதியில் பண்டத்தின் தயாரிப்புப் பற்றிய வரலாற்றுடனும் அத்துடன் பண்டத்துக்கு குறிப்பான தனித்தன்மையை வழங்குகின்ற மனித அல்லது இயற்கைக் காரணிகள் பற்றிய குறிப்பான தனித்தன்மையுடனும் தொடர்புடையவையாகக் காணப்படமுடியும்) | |
| 4.7 புவியியற்சார் சுட்டிக்காட்டுகையானது ஏலவே பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகை ஒன்றுக்கு இணையொப்பான புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றாக இருக்குமிடத்து, விண்ணப்பகாரர் பின்வருவனவற்றைக் குறிப்பிடுதல்வேண்டும்:-<br>(அ) பதிவுசெய்யப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையிலிருந்து விண்ணப்பத்தை வேறுபடுத்துகின்ற முக்கிய காரணிகள் ; அத்துடன்<br>(ஆ) அத்தகைய பதிவின் விளைவொன்றாக அத்தகைய பண்டங்களின் நுகர்வோர் குழப்பநிலைக்கு உள்ளாகவில்லை அல்லது பிழையாக வழிநடாத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவற்கு விண்ணப்பகாரரினால் ஏற்புச்செய்யப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள்பற்றிய விபரங்கள். | |
| 4.8 வெளிநாட்டு புவியியற்சார் சுட்டிக்காட்டுகை ஒன்றின் விடயத்தில், புவியியற்சார் சுட்டிக்காட்டுகையானது தோற்றுவிக்கப்பட்ட நாட்டில் ஏலவே பதிவுசெய்யப்பட்டுள்ளதென்று அல்லது அந்த நாட்டில் உபயோகிக்கப்படாமைக்குள் வரவில்லையென்று பொருள்படும் வகையில் சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கத்திடமிருந்தான அலுவலக முறையான ஆவணமொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். | |

| | |
|---|---|
| 4.9 புவியியற்சார் சுட்டிக்காட்டுகையானது சொற்களை அல்லது உருவக்கூறுகளை அல்லது அவையிரண்டையும் உள்ளடக்கியுள்ளதா என்பது பற்றிய அதன் தோற்றம் தொடர்பிலான எவையேனும் விபரங்கள் | |
| 4.10 விவரக் குறிப்புக்கள் பற்றி அதிகபட்சமாக ஐந்நூறு சொற்களைக் கொண்ட சுருக்கமொன்று- | |
| **5. புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் கட்டுப்பாட்டுத் திட்டம்** | |
| 5.1 தயாரிப்பாளர்களை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைமுறை: | |
| 5.2 தயாரிப்பு முறை மற்றும் கட்டுப்படுத்தப்பட வேண்டிய தயாரிப்பு என்பன பற்றிய சோதனையிடும் இடங்களின் பட்டியல்: | |
| 5.3 சோதனையிடும் இடம் ஒவ்வொன்றிலுமான கட்டுப்படுத்தல் முறைகள் (தயாரிப்புத் தளம், ஆவணங்கள், தயாரிப்பின் ஆய்வுகூடப் பகுப்பாய்வு, தயாரிப்பின் உணர்திறன் பகுப்பாய்வு என்பவற்றின் பரிசோதிப்பு: | |
| 5.4 சோதனையிடும் இடம் ஒவ்வொன்றிலும் கட்டுப்படுத்தப்பட வேண்டிய தயாரிப்பாளர்களும் தொழிற்படுநர்களும்: | |
| 5.5 சோதனையிடும் இடம் ஒவ்வொன்றிலும் கட்டுப்பாட்டின் கால இடைவெளி: | |
| 5.6 சோதனையிடும் இடம் ஒவ்வொன்றிலுமான கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள ஆள்: | |
| 5.7. சோதனையிடும் இடம் ஒவ்வொன்றிலும் இணங்கியொழுகாமையின் விடயத்திலான வலுவளிப்புக்கள்: | |
| **6. தோற்றுவிக்கப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பாதுகாப்புக்கான எண்பிப்பு (விண்ணப்பமானது வெளிநாட்டு புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றுக்கானதாக இருப்பின்)** | |
| **7. முகவர், எவரேனுமிருப்பின்** <br> **(தயவுசெய்து அற்றோணித் தத்துவத்தை இணைக்கவும்)** | |
| 7.1 பெயர்: | |
| 7.2 அஞ்சல் முகவரி: | |
| 7.3 தொலைபேசி இல. | 7.4 தொலைநகல் இல. |
| 7.5 மின்னஞ்சல் முகவரி: | |
| **8. வெளிப்படுத்துகை** | |
| மேற்சொல்லப்பட்ட பண்டங்களை புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றாகப் பதிவுசெய்வதற்கு இத்தால் நான் விண்ணப்பிப்பதுடன் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல் உண்மையானதும் சரியானதுமென்று சான்றுப்படுத்துகின்றேன். | |
| பெயர் | பதவி |
| கையொப்பம் <br><br> (விண்ணப்பதாரர், ஆட்களின் கழகமொன்றாக அல்லது ஒழுங்கமைப்பொன்றாக அல்லது அதிகாரியாக இருப்பின், அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமும் பதவி முத்திரையும்) | திகதி |

**இரண்டாம் அட்டவணை**

[ஒழுங்குவிதி 2, 5, 6, 7, 8, 10 மற்றும்11]

**கட்டணங்கள்**

| பிரிவு/ஒழுங்குவிதி | விவரணம் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| பிரிவு 161 ஆ (1)<br>ஒழுங்குவிதி 2 | விண்ணப்பக்கட்டணம் | 20, 000.00 |
| பிரிவு 161 இ (1)<br>ஒழுங்குவிதி 5 | வர்த்தமானியில் விண்ணப்பத்தை வெளியிடுவதற்கான கட்டணம் (புவியியற்சார் சுட்டிக்காட்டுகை அடையாளக் குறியின் வேலை மற்றும் அளவு என்பவற்றைப் பொருட்படுத்தாமல்) | 8,000.00 |
| பிரிவு 161 ஈ (1) (அ)<br>ஒழுங்குவிதி 6 (அ) 1 | எதிர்ப்புப்பற்றிய அறிவித்தலுக்கான கட்டணம் | 10,000.00 |
| பிரிவு 161 ஊ<br>ஒழுங்குவிதி 7 (ஆ) | பதிவுச்சான்றிதழுக்கான கட்டணம் | 2,000.00 |
| பிரிவு 161 எ (3)<br>ஒழுங்குவிதி 8 (ஆ) | புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் பற்றிய இடாப்பை பரீட்சிப்பதற்கான கட்டணம் | 50.00 |
| | புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் பற்றிய இடாப்பின் சான்றுப்படுத்தப்பட்ட பொழிப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் கட்டணம் | **A4 அளவிலான பக்கம் அல்லது அதன்பாகம்- 150.00**<br><br>ஒவ்வொரு மேலதிகப் பக்கம் அல்லது அதன் பாகம் 75.00 |
| பிரிவு 161 ஔ<br>ஒழுங்குவிதி 10 | விவரக் குறிப்புகளையும் மற்றும் அவற்றோடிணைந்த கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் திருத்துவதற்கான கட்டணம் | 5,000.00 |
| பிரிவு 161 உ (2)<br>ஒழுங்குவிதி 11 | நிருவாகக் கட்டணம் (புதுப்பித்தலுக்காக) | 15,000.00 |
| பிரிவு 161 உ (2)<br>ஒழுங்குவிதி 11 | புதுப்பித்தலுக்கான நிருவாகக் கட்டணத்துக்குரிய மிகைக்கட்டணம் | நிருவாகக் கட்டணத்தின் 10% |
| பிரிவுகள்161ஆ (5)<br>மற்றும்161ஈ (4) | கேட்புக்கான கட்டணம் (நாளொன்றுக்கு) | 5.000.00 |
| பிரிவுகள்161ஆ (3)<br><br>மற்றும்161ஆ (7) | பணிப்பாளர் தலைமையதிபதியினால் முடிவுகளுக்கான காரணங்களை கொடுத்துதவுதல் | 10,000.00 |

## மூன்றாம் அட்டவணை

[ஒழுங்குவிதி 6 (அ) ]

### புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பதிவுசெய்வதற்கான எதிர்ப்பு பற்றிய அறிவித்தல்

| | |
|---|---|
| **அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்**<br><br>அறிவித்தல் பெறப்பட்ட திகதி:<br>கட்டணங்கள் செலுத்தப்பட்ட திகதி:<br>பற்றுச்சீட்டு இல. | |
| **1. எதிர்ப்பாளரின் விபரங்கள்** | |
| 3.1 பெயர்: | |
| 1.2 அஞ்சல்முகவரி: | |
| இலங்கையில் சேவைக்கான அஞ்சல் முகவரி (விண்ணப்பகாரர் இலங்கைக்கு வெளியே வதிபவராக இருப்பின்) | |
| 1.3 தொலைபேசி இல. | 1.4 தொலைநகல் இல. |
| 1.5 மின்னஞ்சல் முகவரி: | 1.6 நாட்டினம்: |
| **2. எதிர்க்கும் விண்ணப்பம் பற்றிய விபரங்கள்** | |
| 2.1 விண்ணப்ப இல. | |
| 2.2 வர்த்தமானி அறிவித்தலின் திகதியும் இலக்கமும்: | |
| 2.3 எதிர்ப்புக்கான ஏதுக்கள் மற்றும் தேவைப்படுத்தப்பட்ட சான்று:<br>(அவசியமானவிடத்து மேலதிக தாள்களைச் சேர்க்கவும்) | |
| **3. முகவர், எவரேனுமிருப்பின்**<br>**(தயவுசெய்து அற்றோணித் தத்துவத்தை இணைக்கவும்.)** | |
| 3.1 பெயர்: | |
| 3.2 அஞ்சல் முகவரி: | |
| 3.3 தொலைபேசி இல. | 3.4 தொலைநகல் இல. |
| 3.5 மின்னஞ்சல் முகவரி: | |
| **4. வெளிப்படுத்துகை** | |
| மேற்சொல்லப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையை பதிவுசெய்வதற்கான எதிர்ப்பு பற்றிய அறிவித்தலை நான் இத்தால் சமர்ப்பிப்பதுடன் இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்ட தகவல் உண்மையானதும் சரியானதுமென சான்றுப்படுத்துகின்றேன். | |
| பெயர் | பதவி |
| கையொப்பம்<br><br>(எதிர்ப்பாளர், ஆட்களின் கழகமொன்றாக அல்லது ஒழுங்கமைப் பொன்றாக அல்லது அதிகாரியாக இருப்பின், அதிகாரமளிக்கப் பட்ட கையொப்பமும் பதவி முத்திரையும்) | திகதி |

**நான்காம் அட்டவணை**

(ஒழுங்குவிதி (ஆ) )

**இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு**

**பதிவுச்சான்றிதழ்**

*2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 161ஊ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகைப் பதிவுச்சான்றிதழ்*

புவியியற்சார் சுட்டிக்காட்டுகை இல. ............. சான்றிதழ் இல.............

.................... தொடர்பில்..................... வகுப்பில் அடங்குகின்ற .................... தொடர்பில் .................... ஆம் திகதியன்றுள்ளவாறு .................... ஆம் இலக்கத்தின்கீழ் ............. ஆம் வகுப்பில் .................... .................... என்பவரின் பெயரில் புவியியற்சார் சுட்டிக்காட்டுகைகள் பற்றிய இடாப்பில் புவியியற்சார் சுட்டிக்காட்டுகை பதிவு செய்யப்பட்டுள்ளதென சான்றுப்படுத்தப்படுகின்றது (அதன் பிரதிநிதித்துவம் இத்துடன் இணைக்கப்படுகின்றது).

இலங்கை, கொழும்பில் 20 .................... ஆம் ஆண்டு .................... மாதத்தின் .................... நாளாகிய இன்று எனது பணிப்பின் பேரில் முத்திரையிடப்பட்டது.

....................
புலமைச் சொத்துப் பணிப்பாளர்
தலைமையதிபதி.

இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம்,
மூன்றாம்மாடி,
"சமாகம் மெதுர",
இல. 400,
டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

## ஐந்தாம் அட்டவணை

[ஒழுங்குவிதி 10]

### விவரக் குறிப்புக்களையும் அவற்றோடிணைந்த கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் திருத்துவதற்கான கோரிக்கை

| | |
|---|---|
| **அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்**<br><br>கோரிக்கை பெறப்பட்ட திகதி:<br>கட்டணங்கள் செலுத்தப்பட்ட திகதி:<br>பற்றுச்சீட்டு இல. | |
| **1. புவியியற்சார் சுட்டிக்காட்டுகை பற்றிய விபரங்கள்** | |
| 1.1 புவியியற்சார் சுட்டிக்காட்டுகை இல. | 1.2 வகுப்பு: |
| 1.3 கோரிக்கை தொடர்பான கருத்துக்கள் அல்லது விபரங்கள்: | |
| **2. பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் பற்றிய விபரங்கள்:** | |
| 2.1 பெயர்: | |
| 2.2 அஞ்சல்முகவரி: | |
| இலங்கையில் சேவைக்கான அஞ்சல் முகவரி (பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் இலங்கைக்கு வெளியே வதிபவராக இருப்பின்) | |
| 2.3 தொலைபேசி இல. | 2.4 தொலைநகல் இல. |
| 2.5 மின்னஞ்சல் முகவரி | 2.6 நாட்டினம்: |
| **3. முகவர், எவரேனுமிருப்பின்**<br>**(தயவுசெய்து அற்றோணித் தத்துவத்தை இணைக்கவும்)** | |
| 3.1 பெயர்: | |
| 3.2 அஞ்சல் முகவரி: | |
| 3.3 தொலைபேசி இல. | 3.4 தொலைநகல் இல. |
| 3.5 மின்னஞ்சல் முகவரி: | |
| **4. வெளிப்படுத்துகை** | |
| புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் மேற்சொல்லப்பட்ட விபரங்களைத் திருத்துவதற்கு நான் இத்தால் (நான் இத்தால் கோருவதுடன் இக்கோரிக்கையில் கொடுக்கப்பட்ட தகவல் உண்மையானதும் சரியானதுமென்று சான்றுப்படுத்துகின்றேன். | |
| பெயர் | பதவி |
| கையொப்பம் | திகதி |
| (பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், ஆட்களின் கழகமொன்றாக அல்லது ஒழுங்கமைப்பொன்றாக அல்லது அதிகாரியாக இருப்பின், அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமும் பதவி முத்திரையும்) | |

## ஆறாம் அட்டவணை

[ஒழுங்குவிதி *11*]

### புவியியற்சார் சுட்டிக்காட்டுகையொன்றின் பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

<table>
<tr><td colspan="2">அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்<br><br>விண்ணப்பம் பெறப்பட்ட திகதி:<br>கட்டணங்கள் செலுத்தப்பட்ட திகதி:<br>விண்ணப்ப இல.</td></tr>
<tr><td colspan="2">1. பதிவு இல.</td></tr>
<tr><td colspan="2">2. வகுப்பு</td></tr>
<tr><td colspan="2">3. பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் பற்றிய விபரங்கள்:</td></tr>
<tr><td colspan="2">3.1 பெயர்:</td></tr>
<tr><td colspan="2">3.2 அஞ்சல் முகவரி:</td></tr>
<tr><td colspan="2">இலங்கையில் சேவைக்கான அஞ்சல் முகவரி (பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் இலங்கைக்கு வெளியே வதிபவராக இருப்பின்)</td></tr>
<tr><td>3.3 தொலைபேசி இல.</td><td>3.4 தொலைநகல் இல.</td></tr>
<tr><td>3.5 மின்னஞ்சல் முகவரி</td><td>3.6 நாட்டினம்:</td></tr>
<tr><td colspan="2">4. பதிவுக்கான விண்ணப்பத் திகதி:</td></tr>
<tr><td colspan="2">5. முகவர், எவரேனுமிருப்பின்<br>(தயவுசெய்து அற்றோணித் தத்துவத்தை இணைக்கவும்)</td></tr>
<tr><td colspan="2">5.1 பெயர்:</td></tr>
<tr><td colspan="2">5.2 அஞ்சல் முகவரி:</td></tr>
<tr><td>5.3 தொலைபேசி இல.</td><td>5.4 தொலைநகல் இல.</td></tr>
<tr><td>5.5 மின்னஞ்சல் முகவரி:</td><td></td></tr>
<tr><td colspan="2">6. ஏற்புடையதாயின், மிகைக்கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட கட்டணங்கள்:</td></tr>
<tr><td colspan="2">7. வெளிப்படுத்துகை</td></tr>
<tr><td colspan="2">மேற்சொல்லப்பட்ட புவியியற்சார் சுட்டிக்காட்டுகையின் பதிவைப் புதுப்பிப்பதற்காக இத்தால் நான் விண்ணப்பிப்பதுடன் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல் உண்மையானதும் சரியானதுமென்று சான்றுப்படுத்துகின்றேன்.</td></tr>
<tr><td>பெயர்</td><td>பதவி</td></tr>
<tr><td>கையொப்பம்<br><br>(பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், ஆட்களின் கழகமொன்றாக அல்லது ஒழுங்கமைப்பொன்றாக அல்லது அதிகாரியாக இருப்பின், அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமும் பதவி முத்திரையும்)</td><td>திகதி</td></tr>
</table>

EOG *10-0200*